JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.271/2014
PW.4

| பெயர் | மாரியப்பன் | தாலுகா | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | | வயது | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 09.06.2026

(எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது கடையநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பக்கீர்பாவா மற்றும் புலன் விசாரணை செய்த காவல்ஆய்வாளர் திரு. சபாபதி ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கு கோப்புக்களின் அடிப்படையில் வழக்கின் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.08.2013 ம் தேதி 21.00 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 308/2013 பிரிவுகள் 279,338,304 (ஏ) இதசவாக வழக்கு பதிவு செய்துள்ளார். மேற்படி புகார் மனு அசாஆ.2 ஆகவும் முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறீயீடு செய்யப்படுகிறது. அதன் அசல் நகலை கனம் தென்காசி நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக விசாரணை அதிகாரி ரகுராஜன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார், நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 19.08.2013 ம் தேதி 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கமருதின் மற்றும் பரமேஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும், பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார், **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அ,சா.ஆ.4**

**மற்றும் அ,சா.ஆ.5 ஆக குறீயீடு செய்யப்படுகிறது,** அதன் பின் அவர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளரர். அதன் பின் சாட்சிகளான பாலமுருகன், சரவணன், மகேஷ், முருகையா, மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பக்கீர்பாவா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின் 20.08.2013ம் தேதி கடையநல்லூர் அரசு மருத்துமனைக்கு சென்று 07.00 மணி முதல் 09.30 மணி வரை இவ்வாகன விபத்து வழக்கில் இறந்துபோன சரவணக்குமார் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணையை நடத்தி உள்ளார். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காவலர் மகாலிங்கம் என்பவரை பணி நியமனம் செய்து சடலக்கூறாய்வுக்கு பின் நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைக்க செய்ய அறிவுரை செய்தார். அதன் பின் 21.08.2013 எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களின் விசாரணைக்கு உட்படுத்தி அவரை விசாரித்து அவரிடம் ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளாரர். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் எண்ணம் இரண்டு **அ.சா.ஆ. 7 மற்றும் அசாஆ.8 ஆ**க குறீயீடு செய்யப்படுகிறது. அதன் பின் இறந்து போன சரவணக்குமாரின் பிரேதத்தை பரிசோதனை செய்த பிரேத பரிசோதனை மருத்துவர் சண்முகையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சடலக்கூறாய்வு அறிக்கை பெற்றுள்ளார். மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 9** ஆக குறீயீடு செய்யப்படுகிறது. பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சைஅளித்த மருத்துவர்கள் ராஜ்குமார் மற்றும் மணிகண்டன் என்பவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி காயச்சான்று **அசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 279,338, 304(ஏ) வின் கீழ் சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களில் அடிப்படையிலும் 20.10.2013ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சொல்லும் நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், சம்பவம் இடம் சென்று பார்வை மற்றும் மாரிதி விரைபடம் தயார் செய்யவில்லை என்றும், சாட்சிகைள சரிவர வர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்படசமாக விசாரணை

செய்து வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC.271/2014
PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஷ் | தாலுகா | ராமநாதபுரம் |
| தந்தை பெயர் | நாகராஜ் | தொழில் | டிரைவர் |
| கிராமம் | ராமநாதபுரம் | வயது | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 09.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:-(Witness examined through VC)

நான் தற்போது ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அசா.1 பாலமுருகன், அசா.2 சரவணன் ஆகியோர்களை தெரியாது. வழக்கில் இறந்து போன சரவண குமார் என்பவரை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 19.08.2013 ம் தேதியன்று 18.30 மணியளவில் வழக்கில் இறந்து போன சரவணக்குமார் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் நானும், அவருடன் சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி தன்னுடைய லாரியை வடக்கிருந்து தெற்காக தென்காசி முதல் மதுரை ரோட்டில் கிருஷ்ணாபுரம் ஊருக்கு வடக்கே அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதில் சரவணக்குமார்இறந்து விட்டார் என்றாலும் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi